**செய்திவெளியீடு -521** **நாள்.3.7.2008**

# ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்புக்கு சிலிண்டர் ஒன்றுக்கு ரூ.30 மானியம் வழங்க அரசு உத்தரவு

தமிழகத்தில் மொத்தம் 1,13,30,124 எரிவாயு இணைப்புகள் உள்ளன. இவற்றில் 57,28,689 இணைப்புகள் ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்புகளாகும். இவை மொத்த இணைப்புகளில் 50 சதவிகிதம் ஆகும். அரசு அறிவித்துள்ள ஒரு சிலிண்டர் எரிவாயு இணைப்பு பெற்ற 57.28 லட்சம் குடும்பங்களுக்கும் சிலிண்டருக்கு ரூ.30 மானியமாக வழங்கப்படும். எனவே சில பத்திரிக்கைகளில் வந்த செய்திபடி 20% மக்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்பெற முடியும் என்பது தவறான செய்தியாகும்.

அரசு அறிவித்துள்ள மேற்படி மானியம் தமிழகத்திலுள்ள அனைத்து எரிவாயு முகவர்களுக்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலம் நேரடியாக வழங்கிட எண்ணெய் நிறுவனங்களுடன் கலந்து ஆலோசித்து நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. இதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. ஜூலை, ஆகஸ்ட் 2008 மாதங்களுக்கு எரிவாயு முகவர்களுக்கு மேற்படி மானிய தொகையை முன்பணமாக வழங்க, அரசு ரூ.18 கோடி ஒதுக்கியுள்ளது. இந்த நிதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் மூலம் எரிவாயு முகவர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனவே நிதி விடுப்பதில் தாமதம் ஏற்பட வாய்ப்பில்லை.

மே 2008 மாதம் முதல் ஒவ்வொரு மாதமும் விற்பனை புள்ளிவிவரங்கள் அடிப்படையில் எரிவாயு முகவர்களுக்கு மானிய தொகை மாத முதல் தேதியே வழங்கப்படும். இத்திட்டம் எவ்வித புகாருமின்றி செயல்படுத்தவும் அரசு அறிவித்துள்ள மானியம் ஒரு சிலிண்டர் இணைப்பு பெற்ற அனைத்து பயனாளிகளுக்கும் சென்றடைய தேவையான நடவடிக்கைகளும் அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**